රාජ්‍ය පරිපාලන, පළාත් සභා සහ පළාත් පාලන අමාත්‍යාංශය
பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
**Ministry of Public Administration, Provincial Councils and Local Government**

ඒකාබද්ධ සේවා අංශය | இணைந்த சேவைகள் பிரிவு | **Combined Services Division**
නිදහස් චතුරශ්‍රය, කොළඹ 07, ශ්‍රී ලංකාව. | சுதந்திரச் சதுக்கம், கொழும்பு 07, இலங்கை. | *Independence Square, Colombo 07, Sri Lanka*

දුරකතනය / தொலைபேசி / Telephone: 011- 2694560
ෆැක්ස් / தொலைநகல் / Fax: 011- 2692254
ඊ- මේල් / மின்னஞ்சல் / E-mail: dgcs@pubad.gov.lk
වෙබ් අඩවිය / இணையத்தளம் / Web Site: www.pubad.gov.lk

මගේ අංකය / எனது இல / My No: CS/DOS/Policy/04
ඔබේ අංකය / உமது இல / Your No:
දිනය / திகதி / Date: 2025.02.13

அமைச்சின் செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்
மாவட்டச் செயலாளர்கள்
பிரதேச செயலாளர்கள்

**2022.01.03 மற்றும் 2022.04.01 தினத்தன்று இணைத்துக் கொள்ளப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன் தடைத்தாண்டல் பரீட்சைக்கு நிவாரணத்தை பெற்று கொடுத்தல் - அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவை**

மேற்படி விடயம் தொடர்பில் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் சுற்றறிக்கை இலக்கம் 01/2023 மற்றும் அரசாங்க சேவை ஆணைக்குழு செயலாளரின் இலக்கம் PSC/APP/13/4/33/2023 மற்றும் 2024.08.08 தினத்தன்றான கடிதத்துடன் இணையப் பெற்றது.

02. அதனூடாக தெரிவித்துள்ளபடி 2022.01.03, 2022.04.01 தினத்தன்று இணைத்துக் கொள்ளப்படும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் முதலாம் வினைத்திறன் தடைத்தாண்டல் பரீட்சையை சித்தியடைவதற்கு நியமித்த தினம் 2024.06.30 தினத்திற்கு பின்னர் உள்ளமையினால் அரசாங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கை 01/2023இன் ஏற்பாடுகளின்படி அவ் உத்தியோகத்தர்களுக்கு தொடர்ச்சியான பரீட்சை சந்தர்ப்பங்கள் 03 உட்பட IIIஆம் தரத்திலுள்ள உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன் தடைத்தாண்டல் பரீட்சையினை பூர்த்தி செய்ய முடியும். அதனால் 2022 ஆம் வருடத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்கு இணைத்துக் கொள்ளப்பட்ட உத்தியோகத்தர்கள் நியமனம் பெற்ற நாளிலிருந்து வரும் முதலாம் தொடர்ச்சியான பரீட்சை சந்தர்ப்பங்கள் 03 (எதிர்காலத்தில் நடைபெற போகும் பரீட்சை சந்தர்ப்பங்களுடன்) உட்பட 1ஆம் வினைத்திறன் தடைத்தாண்டல் பரீட்சையில் சித்தியடைந்தால், அவ் உத்தியோகத்தர்களுக்கு 1ஆம் வினைத்திறன் தடைத்தாண்டல் பரீட்சையில் சித்தியடைவதற்காக நியமித்த நிவாரண காலத்தை வழங்கி அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையில் நியமனத்தை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

03. எவ்வாறிருந்த போதிலும் தகுதிகூர்நிலைக் காலப்பகுதிக்குள் முதலாம் வினைத்திறன் தடைத்தாண்டல் பரீட்சையை சித்தியடையாத உத்தியோகத்தர்களுக்கு அவ் வினைத்திறன் தடைத்தாண்டல் பரீட்சையினை பூர்த்தியாக்கும் வரையிலும் மூன்றாம் சம்பள ஏற்றங்களை செலுத்துவதற்கு முடியாததுடன், மூன்றாம் சம்பள ஏற்றத்தை நிறுத்துவதற்கு செயலாற்ற வேண்டும். அவ்வாறிருந்த போதிலும் தொடர்ச்சியான பரீட்சை சந்தர்ப்பங்கள் 03 உட்பட III தரத்திலுள்ள உத்தியோகத்தர்களுக்காக வினைத்திறன் தடைத்தாண்டல் பரீட்சையை பூர்த்தி செய்தால் நிறுத்தப்பட்ட சம்பள ஏற்றங்களை செலுத்துவதற்கு செயலாற்றலாம் என தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். அதனால் தொடர்ச்சியான பரீட்சை சந்தர்ப்பங்கள் 03 உட்பட 1ஆம் வினைத்திறன் தடைத்தாண்டல் பரீட்சையினை சித்தியடையும் உத்தியோகத்தர்களின் தடைத்தாண்டல் நிவாரணங்களை என்னிடம் சமர்ப்பிப்பதிலிருந்து விலகியிருக்குமாறு மேலும் தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஒப்பம்./ என்.யு. நிஷான் மெண்டிஸ்
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்